

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் நினைவுநாளில், புதுடெல்லியில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி வணங்கினர்.




சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் புகழரங்கம் போராளி 2 ”பெண்ணுரிமை காத்த பெருந்தலைவர்! மண்ணுரிமை காத்த தமிழறிஞர்! எனும் தலைப்பில் நேற்று (08.08.2026– சனிக்கிழமை) சென்னை, புரசைவாக்கம், தானா தெருவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமையில்,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்ற புகழரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் திருமதி நாமக்கல் ப.ராணி ஆகியோர் புகழுரைத்தனர். இப்புகழரங்கத்தில் மேயர்.பிரியாராஜன்,கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பகுதிக் கழகச் செயலாளர்கள் சொ. வேலு, வி. சுதாகர், கே எஸ் எம் நாதன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, சரிதா மகேஷ் குமார், டாக்டர் ஜி சாந்தகுமாரி,, ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுதா தீனதயாளன், தேடல் புருஷோத்தமன், புரசை ஜி. தாமோதரன், ,க. நந்தீஸ்வரன் அ.நிர்மலா தேவி, கே.கோகுல், த.ஜெயக்குமார், மற்றும் கழக நிர்வாகிகள்,செயல் வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தமிழ்நாடு விவசாயச் சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் தெய்வசிகாமணி தலைமையில்

# விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்தனர்!

### விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு சட்டமன்றத்தில் குரல் எழுப்புமாறு கேட்டுக் கொண்டனர்!





சென்னை, ஆக.9-

தமிழ்நாடு விவசாயச் சங்கங்களின் கூட்டு இயக்கத் தலைவர் தெய்வசிகாமணி அவர்கள் தலைமையிலான விவசாயச் சங்கப் பிரதிநிதிகள், நேற்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது, டெல்டாவை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும் - பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தங்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தஞ்சையில் தி.மு.கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காகவும் சட்டமன்றத்தில் குரல்கொடுத்ததற்காகவும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மேலும், விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடியதற்காக, த.வெ.க. அரசின் காவல் துறை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கைது செய்தது, மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

இந்தக் கூட்டு இயக்கத்தில் உள்ள 84 விவசாய அமைப்புகளும், த.வெ.க. அரசு பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யாமல் விவசாயிகளை வஞ்சிப்பதைக் கண்டித்து, பல்வேறு பகுதிகளில் தொடர் போராட்டம் நடத்திவருகிறார்கள்.

அந்த வகையில், தங்களுடைய போராட்டத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறும், சட்டமன்றத்தில் குரல் எழுப்புமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், கழகத் தலைவரின் வழிகாட்டுதலில், சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றும், விவசாயிகளுக்கு என்றும் உற்றத்துணையாக இருப்போம் என்றும், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுக்கு உறுதி அளித்தார்.

